செ.வெ.எண்.29 நாள்: 12.01.2022

## பத்திரிக்கைச் செய்தி

நம் இந்தியத் திருநாடு பல்வேறு தியாகிகளின் தியாகத்தால் 15 ஆகஸ்ட் 1947-ல் அந்நியரால் பூட்டப்பட்ட அடிமை விலங்கை உடைத்தெறிந்து சுதந்திரம் பெற்றது.

பல்வேறு தியாகிகளால் நமக்கு கொடுக்கப்பட்ட இந்த சுதந்திரத்தின் 75-வது ஆண்டு வெற்றி விழாவினை சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழாவாக (AZADI KA AMRIT MAHOTSAV) மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் நாட்டு குடிமக்களுடன் இணைந்து கொண்டாட ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.

அந்த வகையில் 10 வயதிற்கு மேற்பட்ட இந்திய குடிமக்கள் அனைவரும் பங்கு பெறும் வகையில் தேசபக்தி பாடல்கள் எழுதுதல், தாலாட்டு பாடல்கள் எழுதுதல் மற்றும் ரங்கோலி கோலப் போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணாக்கர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது படைப்புகளை ஒளிப்பட நகல் வடிவில் https://amritmahotsav.nic.in/competitions.htm என்ற இணையதளத்தில் காணும் அறிவுரைகளுக்குட்பட்டு பதிவேற்றம் செய்ய வேண்டும். பதிவேற்றம் செய்யும் அனைத்து நபர்களும் ஒன்றிய அரசின் பண்பாட்டுத்துறை அமைச்சகம் வாயிலாக வழங்கப்படும் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தேசபக்தி பாடல்கள் எழுதுதல் மற்றும் தாலாட்டு பாடல்கள் எழுதுதல் ஆகிய போட்டிகளுக்கு இணையதளத்தில் தங்கள் படைப்பினை பதிவேற்றம் செய்ய கடைசி நாள்: 31.01.2022 ஆகும். ரங்கோலி கோலப் போட்டிகளுக்கான கடைசி நாள்: 14.01.2022 ஆகும். எனவே மாணாக்கர்களும் பொதுமக்களும் இப்போட்டியில் கலந்து கொள்ளுமாறு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.